Private
E-Sevai
Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | புதன், பிப்ரவரி 26, 2025 | இதழ் 319

# சென்னை கோபாலபுரத்தில் ரூ.8 கோடியில் 'கலைஞர் நூற்றாண்டு குத்துசண்டை அகாடமி' : முதலமைச்சர் ஸ்டாலின் திறந்து வைத்தார்





சென்னை, 26 பிப்ரவரி 2025: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் சென்னை, ஞோபாலபுரத்தில் 8 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 'கலைஞர் நூற்றாண்டு குத்துசண்டை அகாடமி' கட்டிடத்தை திறந்துவைத்தார்.

2022 - 2023 ம் நிதி ஆண்டிற்கான இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் மானிய கோரிக்கையில், சென்னை நகரமானது பாரம்பரியமாகவே குத்துச்சண்டை விளையாட்டிற்கு புகழ் பெற்றது. சென்னையில் பல்வேறு குத்துச் சண்டை வீரர்கள் உருவாகி குத்துச் சண்டை விளையாட்டில் புகழ்பெற்று விளங்கினர்.

தமிழ்நாட்டில் குத்துச்சண்டை விளையாட்டை மீண்டும் புகழ்பெறச் செய்ய, பல்வேறு உலகப்புகழ் பெற்ற குத்துச்சண்டை வீரர்களை உருவாக்குவது அவசியமானதாகும். எனவே, தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் குத்துச் சண்டை விளையாட்டிற்கு புத்துயிர் அளிக்க குத்துச்சண்டை அகாடமி அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, முதலமைச்சரால் 2.11.2023 அன்று தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் சென்னை, கோபாலபுரத்தில் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குத்துச்சண்டை அகாடமி அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

**போட்டியை பார்வையிட்டு...**

அதனைத் தொடர்ந்து, சென்னை கோபாலபுரத்தில் 8 கோடி ரூபாய் செலவில், 890 நபர்கள் அமரும் வகையிலான பார்வையாளர் மாடத்துடன் கூடிய முற்றிலும் குளிரூட்டப்பட்ட உள்அரங்கம், பயிற்சி மைதானம், உடற்பயிற்சிக் கூடம், பயிற்சியாளர் அறை, பயிற்சி செய்யும் பகுதி, மருத்துவர் அறை, நிர்வாக அலுவலகம் ஆகிய வசதிகளுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு குத்துச் சண்டை அகாடமியை முதலமைச்சர் திறந்து வைத்தார். மேலும் அங்கு நடைபெற்ற ஃப்ளை வெயிட் பிரிவில் 48 முதல் 51 கிலோ எடைப் பிரிவிற்கான குத்துச் சண்டை போட்டியை பார்வையிட்டு, வெற்றி பெற்ற குத்துச்சண்டை வீராங்கனைக்கு கோப்பையை வழங்கினார்.

இந்த குத்துச் சண்டை அகாடமி அமைக்கப்படுவதன் மூலம், சென்னை மற்றும் அதன் சுற்று வட்டாரத்தில் உள்ள குத்துச்சண்டை ஆர்வலர்கள் மற்றும விளையாட்டு வீரர்களுக்கு மிகவும் பயனுள்ளதாகவும், தேசிய மற்றும் சர்வதேச அளவிலான குத்துச்சண்டை போட்டியில் கலந்து கொண்டு பதக்கங்களை வெல்வதற்கு நல்வாய்ப்பாகவும் அமையும்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் நா. எழிலன், அ.வெற்றியழகன், தாயகம் கவி, எபிநேசர், அசன் மௌலானா, இ.பரந்தாமன், எம்.கே. மோகன், ஜோசப் சாமுவேல், ஆர்.டி.சேகர்,

துணை மேயர் மு.மகேஷ் குமார், மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு, விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள்

# பாதுகாப்பு மற்றும் எல்லை மேலாண்மை குறித்த ஆய்வுக்காக ராணுவ நடவடிக்கைகள் பிரிவு தலைமை இயக்குநர் மணிப்பூர் வருகை

சென்னை, 26 பிப்ரவரி 2025: இந்திய ராணுவத்தின் ராணுவ நடவடிக்கைகள் பிரிவு தலைமை இயக்குநர் லெப்டினன்ட் ஜெனரல் ராஜீவ் கய், 2025 பிப்ரவரி 24 மற்றும் 25 தேதிகளில் மணிப்பூருக்கு பயணம் செய்து இந்தியா-மியான்மர் எல்லையில் நிலைமையைப் பற்றிய விரிவான புரிதலையும் மாநிலத்தில் நடந்து வரும் எல்லை உள்கட்டமைப்பு மேம்பாடுகளின் நிலை குறித்த கருத்துகளையும் பெற்றார்.

அவர் தனது பயணத்தின்போது, மணிப்பூர் ஆளுநர் திரு அஜய் குமார் பல்லா, மாநில பாதுகாப்பு ஆலோசகர், மணிப்பூர் தலைமைச் செயலாளர், மணிப்பூர் காவல்துறை தலைமை இயக்குநர் ஆகியோரைச் சந்தித்தார். இம்மாநிலத்தில் தற்போதுள்ள பாதுகாப்பு நிலைமையை இயல்பாக்குவது, குறிப்பாக எல்லை நிர்வாகத்தை மேம்படுத்துவது மற்றும் இந்தியா-மியான்மர் னுல்லைப் பகுதி நெடுகிலும் பாதுகாப்பு உள்கட்டமைப்பை வலுப்படுத்துவது குறித்தும் விவாதங்கள் நடைபெற்றன.

லெப்டினன்ட் ஜெனரல் கய் வருகை, மணிப்பூர் மக்களின் நலனையும் நிலைத்தன்மையையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட முன்முயற்சிகளை செயல்படுத்துவதில் ராணுவம் மற்றும் அரசு அதிகாரிகளுக்கு இடையிலான கூட்டு அணுகுமுறையை எடுத்துக்காட்டுகிறது.

# வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான தரவு சார்ந்த நுண்ணறிவுகளுடன் இளைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கும் நிரலோட்டம்

சென்னை 26, பிப்ரவரி 2025 : மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகமானது மைகவ் இணைய தளத்துடன் இணைந்து, வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான தரவு சார்ந்த நுண்ணறிவு என்ற கருப்பொருளை மையமாகக் கொண்ட புதுமை கண்டுபிடிப்புகள் என்ற தலைப்பில் ஒரு அற்புதமான தரவு காட்சிப்படுத்தல் ஹேக்கத்தானை (நிரலோட்டம்) தொடங்க உள்ளது. தேசிய புள்ளியியல் அலுவலகம் உருவாக்கிய பரந்த அதிகாரப்பூர்வ புள்ளி விவரங்களை புதுமையான தரவு சார்ந்த நுண்ணறிவுகளை உருவாக்குவதற்கு பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு இந்தியாவின் இளம் மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களை ஊக்குவிப்பதை இந்த ஹேக்கத்தான் நோக்கமாகக் கொண்டுள்ளது.

தொழிலாளர் சக்தி காலமுறை கணக்கெடுப்பு, வீட்டு நுகர்வோர் செலவின ஆய்வு, தொழில் துறைகளின் வருடாந்திர ஆய்வு, நுகர்வோர் விலைக் குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்ற அமைச்சகத்தின் இணையதளத்தில் கிடைக்கும் அறிக்கைகள், மைக்ரோ டேட்டா மற்றும் பிற தரவுத்தொகுப்புகளிலிருந்து அதிகாரப்பூர்வ புள்ளி விவரங்களை ஆராய்ந்து பகுப்பாய்வு செய்ய பங்கேற்பாளர்கள் அழைக்கப்படுகிறார்கள்.

இந்த ஹேக்கத்தான் நிகழ்வு மைகவ் தளத்தில் 2025 பிப்ரவரி 25 முதல் 2025 மார்ச் 31 வரை நடைபெறும். இளங்கலை, முதுகலை அல்லது ஆராய்ச்சி செய்யும் மாணவர்கள் பங்கேற்கலாம்.

தொழில்நிபுணர்கள் மற்றும் கல்வியாளர்கள் அடங்கிய மதிப்பீட்டுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் முதல் 30 பங்கேற்பாளர்களுக்கு ஒரு முதல் பரிசாக ரூ.2 லட்சம், அதைத் தொடர்ந்து இரண்டு இரண்டாம் பரிசாக தலா ரூ.1 லட்சம், இரண்டு மூன்றாம் பரிசாக தலா ரூ.50,000 மற்றும் ஆறுதல் பரிசுகளாக இருபத்தைந்து பேருக்கு தலா ரூ.20,000 வழங்கப்படும்.

# பாட்னா மருத்துவக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் குடியரசுத்தலைவர் பங்கேற்பு



சென்னை 26, பிப்ரவரி 2025 : பீகார் மாநிலம் பாட்னாவில் பிப்ரவரி 25, 2025 நடைபெற்ற பாட்னா மருத்துவக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கலந்து கொண்டார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், பாட்னா மருத்துவக் கல்லூரி பீகாரின் விலைமதிப்பற்ற பாரம்பரியத்தில் ஒன்றாகும் என்று குறிப்பிட்டார். ஆசியாவின் சிறந்த மருத்துவமனைகளில் ஒன்றான பாட்னா மருத்துவக் கல்லூரி மருத்துவமனை (பி.எம்.சி.எச்) பழமையைப் பாதுகாத்துக் கொண்டே நவீனத்தை நோக்கி முன்னேறி வரும் புகழ்பெற்ற வரலாற்றைக் கொண்டுள்ளது. இதன் முன்னாள் மாணவர்கள் தங்கள் திறமை, சேவை, அர்ப்பணிப்பு ஆகியவற்றின் வலிமையால் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தங்களுக்கும் பி.எம்.சி.எச்-க்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

சிகிச்சைக்காக மற்றொரு நகரத்திற்கு அல்லது மாநிலத்திற்கு செல்வது என்பது சிகிச்சையில் தாமதம், உணவு, தங்குமிடம் மற்றும் வேலைவாய்ப்பு பிரச்சினைகளை ஏற்படுத்துவதாகக் குடியரசுத் தலைவர் கூறினார். இது முக்கிய நகரங்களின் ஊருத்துவ மனைகளுக்கும் அதிக சுமையை ஏற்படுத்துகிறது. நாடு முழுவதும் நல்ல மருத்துவ மனைகளைப் பரவலாக்குவது இந்த பிரச்சினைகள் அனைத்தையும் தீர்க்க உதவும். சென்னை, ஹைதராபாத், மும்பை, இந்தூர் போன்ற நகரங்கள் சிறப்பு சிகிச்சைக்கான மையங்களாக வளர்ந்துள்ளன. பீகாரும் இதுபோன்ற பல மையங்களை உருவாக்க வேண்டும். இது பீகார் மக்களுக்கு சிறப்பான மருத்துவ சிகிச்சையை வழங்குவது மட்டுமின்றி, மாநிலத்தின் பொருளாதாரத்தையும் உயர்த்தும். பி.எம்.சி.எச் மற்றும் அதன் முன்னாள் மாணவர்கள் தங்கள் அனுபவத்துடன் இந்த முயற்சிக்கு பெரிதும் பங்களிக்க முடியும். இது தொழில்நுட்பத்தின் சகாப்தம் என்று கூறிய குடியரசுத் தலைவர், மருத்துவத் துறையிலும் தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிக்கிறது. செயற்கை நுண்ணறிவு, ரோபோட்டிக்ஸ் போன்ற தொழில்நுட்பங்கள் மருத்துவ செயல்முறையை எளிமையாகவும் துல்லியமாகவும் ஆக்குகின்றன என்றார். பி.எம்.சி.எச் இன் அனைத்து பங்குதாரர்களும் சமீபத்திய தொழில்நுட்பங்களை பின்பற்ற எப்போதும் தயாராக இருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். இது சிகிச்சையை எளிதாக்குவது மட்டுமின்றி, மருத்துவர்களின் அறிவு மற்றும் செயல்திறனையும் அதிகரிக்கும் என்று அவர் கூறினார்.

நமது மருத்துவர்கள் ஆராய்ச்சியாளர்களாகவும், சிகிச்சையாளர்களாகவும், ஆசிரியர்களாகவும், ஆலோசகர்களாகவும் உள்ளனர் என்று குடியரசுத் தலைவர் கூறினார். இந்த அனைத்து பாத்திரங்களிலும், அவர்கள் மக்களுக்கும் சமூகத்திற்கும் சேவை செய்கிறார்கள்; தேச நிர்மாணத்திற்கு பங்களிக்கிறார்கள்.

ரத்த தானம் மற்றும் உடல் உறுப்பு தானத்தின் முக்கியத்துவம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தினார்.

# பிரதமர் கிசான் நிதி உதவி திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு ரூ.22 ஆயிரம் கோடி நிதி: தமிழகத்தில் 22 லட்சம் பேர் பயன்பெற்றனர்

சென்னை 26, பிப்ரவரி 2025 : பிரதமர் கிசான் நிதி உதவி திட்டத்தின்கீழ் 19-வது தவணையாக ரூ.22 ஆயிரம் கோடியை பிரதமர் மோடி நேற்று விடுவித்தார். இதன் மூலம் தமிழகத்தில் 22 லட்சம் பேர் பயன்பெற்றனர்.

நாடு முழுவதும் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளின் மேம்பாட்டுக்காக மத்திய அரசு ஆண்டுதோறும் ரூ.6 ஆயிரம் வழங்கி வருகிறது. இந்த தொகை ஆண்டுக்கு 3 தவணையாக ரூ.2 ஆயிரம் வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

பிரதமர் கிசான் சம்மான் நிதி (பி.எம். கிசான்) என்ற பெயரில் கடந்த 2018-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் அமல்படுத்தப்பட்டு வரும் இந்த திட்டத்தில் இதுவரை 18 தவணைகளில் தலா ரூ.2 ஆயிரம் வழங்கப்பட்டு இருக்கிறது. இதன் 19-வது தவணை தொகையை பிரதமர் மோடி நேற்று விடுவித்தார். இந்த தொகை விவசாயிகளின் வங்கிக்கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டு உள்ளது. அதன்படி நாடு முழுவதும் உள்ள இந்த திட்ட பயனாளிகளுக்கு என ரூ.22 ஆயிரம் கோடிக்கு மேல் நேற்று விடுவிக்கப்பட்டது.

பீகார் மாநிலம் பகல்பூரில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று இந்த தொகையை பிரதமர் மோடி விடுவித்தார். மேலும் மாநிலத்துக்கான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும் அப்போது பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். இதில் பேசிய அவர் மாநில முன்னாள் முதலமைச்சரும், ராஷ்ட்ரீய ஜனதாதள தலைவருமான லாலு பிரசாத் யாதவை கடுமையாக தாக்கி பேசினார். குறிப்பாக கும்பமேளா குறித்த லாலு பிரசாத்தின் விமர்சனத்துக்கு கண்டனம் தெரிவித்தார்.

அவர் பேசும் போது, 'பிரயாக்ராஜ் மகா கும்பமேளா பாரதத்தின் ஒற்றுமையின் மிகப்பெரிய கொண்டாட்டம். அங்கு புனித நீராடியவர்களின் எண்ணிக்கை ஐரோப்பா மக்கள் தொகையை விட அதிகம். பீகாரை சேர்ந்த ஏராளமானவர்கள் கூட புனித நீராடி இருக்கிறார்கள். ஆனால் இந்த காட்டாட்சிக்காரர்கள் கும்பமேளா குறித்து ஆபாசமாக கூறுகிறார்கள். இவர்கள் அயோத்தி ராமர் கோவிலுக்கு கூட எதிர்ப்பு தெரிவித்தனர். அவர்களை பீகார் மன்னிக்காது என்பது எனக்கு தெரியும்' என சாடினார்.

இந்த நிகழ்ச்சியில் மாநில முதலமைச்சர் நிதிஷ்குமார் மற்றும் மத்திய- மாநில அமைச்சர்கள் பங்கேற்றனர். முன்னதாக நாட்டின் அன்னதான பிரபுக்களான விவசாயிகளை கவுரவிப்பதிலும், அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும் அரசு பெருமை அடைவதாக தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டு இருந்தார்.

பி.எம். கிசான் திட்டம் 6 ஆண்டுகளை நிறைவு செய்திருப்பது தொடர்பாக பிரதமர் மோடி தனது எக்ஸ் தளத்தில், 'எனது அரசு மேற்கொண்ட முயற்சிகளின் பலனாக கடந்த 10 ஆண்டுகளில் வேளாண் துறை வேகமாக வளர்ந்து வருகிறது. லட்சக்கணக்கான சிறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் நிதியுதவியால் அவர்களது வருமானம் அதிகரித்துள்ள நிலையில், அவர்களுக்கு ஏற்படும் செலவும் குறைந்துள்ளது' என்று குறிப்பிட்டு இருந்தார்.

இந்த திட்டத்தின் மூலம் இதுவரை சுமார் ரூ.3.5 லட்சம் கோடி ரூபாய் விவசாயிகளின் வங்கிக்கணக்கில் செலுத்தப்பட்டு இருப்பதாகவும், அரசின் இந்த நடவடிக்கையால் விவசாயிகளுக்கு மரியாதை, செழிப்பு மற்றும் புதிய பலத்தை அளித்துள்ளதாகவும் பெருமிதம் தெரிவித்து உள்ளார். தமிழ்நாட்டைப் பொறுத்த வரை இந்த திட்டத்தின்கீழ் 21 லட்சத்து 94 ஆயிரத்து 772 பேர் பயன் பெற்றனர். இந்த விவசாயிகளின் வங்கிக் கணக்கில் மொத்தம் நேற்று ரூ.471 கோடி வரவு வைக்கப்பட்டு உள்ளது.


தமிழ் குரல் மக்கள்
tamilmakkalkural@gmail.com RNI No. : TNTAM/24940
திசைச் சாலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# அட்லாண்டாவில் உள்ள காசி தமிழ்ச் சங்கமத்திற்காக புலம்பெயர்ந்த இந்தியர்களை ஒன்றிணைத்தது இந்திய துணைத் தூதரகம்

சென்னை 26, பிப்ரவரி 2025: அட்லாண்டாவில் உள்ள இந்திய துணைத் தூதரகம் காசி தமிழ்ச் சங்கத்தின் 3 வது பதிப்பை நடத்தியது, இது தமிழ்நாடு மற்றும் வாரணாசி இடையேயான ஆழமான வேரூன்றிய கலாச்சார, வரலாற்று மற்றும் ஆன்மீக உறவுகளைக் கொண்டாடுகிறது மற்றும் வலுப்படுத்துகிறது. கற்றல் மையங்களாக இரு பிராந்தியங்களுக்கும் இடையிலான பல நூற்றாண்டுகள் பழமையான தொடர்பை இந்த நிகழ்வு எடுத்துக் காட்டியது, அவற்றின் பகிரப்பட்ட பாரம்பரியம் மற்றும் நீடித்த செல்வாக்கை வலியுறுத்தியது.







காசி தமிழ்ச் சங்கம் போன்ற முன் மு“ற்சிகள் பிரதமரின் “ஒரே பாரதம், உன்னத பாரதம்” என்ற தொலைநோக்குப் பார்வையுடன் எவ்வாறு ஒத்துப்போகின்றன என்பதை அடிக்கோடிட்டுக் காட்டினார். கண்டங்களைக் கடந்தும் கூட, இந்தியாவின் கலாச்சார பிணைப்புகள் வலுவாக இருப்பதாகவும், தொடர்ந்து ஊக்கமளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வின் முக்கிய பகுதி இந்திய மருத்துவ சித்த முறைக்கு அகத்திய முனிவரின் பங்களிப்பை மையமாகக் கொண்டது. ஆல்பரெட்டா தமிழ்ப்பள்ளியைச் சேர்ந்த ஆசிரியரும் மாணவருமான ஒருவர், பாரம்பரிய மருத்துவம், ஆன்மிகம், தமிழ் இலக்கியம் ஆகியவற்றில் தாம் ஏற்படுத்திய தாக்கம் குறித்த நுண்ணறிவுகளைப் பகிர்ந்து கொண்டார்.

சித்த மருத்துவம் படிக்க தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டத்தின் கீழ் இந்தியா வந்திருந்த டாக்டர் ஸ்ரீதரன் மற்றும் மோர்ஹவுஸ் ஸ்கூல் ஆஃப் மெடிசின் மாணவர்கள் குழுவினரின் விளக்கக் காட்சியும் நிகழ்ச்சியில் இடம் பெற்றது. அவர்கள் தங்களது வளமான அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர், நவீன சுகாதாரப் பராமரிப்பில் இந்த பண்டைய மருத்துவ முறையின் பொருத்தத்தை எடுத்துரைத்தனர்.

கலாச்சார பாரம்பரியத்தை கொண்டாடுவது மட்டுமல்லாமல், பாரம்பரிய அறிவு முறைகள் மற்றும் அவற்றின் உலகளாவிய முக்கியத்துவம் பற்றிய அர்த்தமுள்ள விவாதங்களுக்கு ஒரு தளத்தை வழங்கிய ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்வதில் தூதரகத்தின் முயற்சிகளை அட்லாண்டாவில் உள்ள புலம்பெயர்ந்த தமிழர்கள் ஆழ்ந்த பாராட்டினர்.

# வுமன் அப் தமிழ்நாடு மற்றும் இம்பாக்ட்ரீ லைஃப்லைவ்ஸ் ஃபவுண்டேஷன்- தூத்துக்குடியில் பெண் தொழில் முனைவோருக்கான சந்தை உருவகப்படுத்துதல் போட்டி

தூத்துக்குடி 26, பிப்ரவரி 2025: வுமன் அப் தமிழ்நாடு மற்றும் இம்பாக்ட்ரீ லைஃப்லைவ்ஸ் ஃபவுண்டேஷன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் (திஎன்யுஹெச்டிபி) மற்றும் அக்ஶூட் அறக்கட்டளை ஆகியவற்றுடன் இணைந்து, பயிற்சி, வழிகாட்டுதல் மற்றும் தனிப்பட்ட ஆதரவு மூலம் பெண் தொழில்முனைவோருக்கு அதிகாரம் அளிக்கும் 9 மாத என்இதிஆர்ஐ என்ற கட்டமைக்கப்பட்ட 9 மாத திட்டத்தை தொடங்கியுள்ளது.

நடுத்தர வருவாய் சமூகங்களில் உள்ள பெண் தொழில் முனைவோர் தங்கள் நிறுவனங்களைத் தொடங்கும் போது சுய உதவிக் குழு, திறன் மேம்பாட்டு ஆதரவு போன்ற சுற்றுச்சூழல் அமைப்புகளைக் கொண்டிருந்தாலும், அவர்களில் 70% க்கும் அதிகமானோர் 1-1.5 ஆண்டுகளுக்குப் பிறகு தங்கள் வணிகத்தை அளவிடுவதற்கான நிலையான ஆதரவு இல்லாததால் தோல்வியடைகிறார்கள்.

என்இதிஆர்ஐ திட்டத்தின் மூலம் மதுரை மற்றும் தூத்துக்குடியில் உள்ள கிராமப்புற சமூகங்களைச் சேர்ந்த 50 பெண் தொழில் முனைவோர் தேர்வு செய்யப்பட்டனர். கடந்த 12 மாதங்களில், அவர்களின் சவால்களை அடையாளம் காணவும், அடிப்படைக் காரணங்களைப் புரிந்துகொள்ளவும் ஆழமான ஆராய்ச்சி நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து திறன் மேம்பாடு, வழிகாட்டுதல், வணிக விரிவாக்கத்திற்கான மூலோபாய உருவாக்கம், பயனுள்ள வாடிக்கையாளர் தொடர்பு மற்றும் சந்தைப்படுத்தல் போன்ற பல ஆதரவு நடவடிக்கைகள் அவர்களின் வணிகங்களை அளவிட உதவுகின்றன.

இன்றுவரை, 61% தொழில்முனைவோர் தங்கள் வணிகங்களை வெற்றிகரமாக விரிவுபடுத்தியுள்ளனர், 15% பேர் தங்கள் வணிக வருமானத்தை அதிகரித்துள்ளனர், மேலும் 67% நம்பிக்கை மற்றும் முடிவெடுக்கும் திறன்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு தெரிவித்துள்ளனர்.

எண்களுக்குப் பின்னால் உள்ள கதைகள் இன்னும் எங்களை ஊக்கமளிக்கின்றன, மேலும், இந்த நம்பமுடியாத பெண் தொழில்முனைவோருக்குள் இருந்து மகத்தான திறனை கட்டவிழ்த்து விட இலக்கு மற்றும் நீடித்த பயிற்சி மற்றும் ஆதரவு என்ன செய்ய முடியும் என்பதற்கு இது ஒரு சான்றாகும்” என்று டாக்டர் வள்ளி அருணாசலம் கூறுகிறார். இந்த முயற்சியின் முக்கிய சிறப்பம்சமாக என்இதிஆர்ஐ சந்தை உருவகப்படுத்துதல் போட்டி உள்ளது. இந்த நிகழ்ச்சியை தமிழ்நாடு பெண்கள் அப் நிறுவனர் டாக்டர் வள்ளி அருணாசலம் மற்றும் இம்பாக்ட்ரீ லைவ்லிவ்மென்ட் அறக்கட்டளையின் நிறுவனர் திருமதி ராஜஸ்ரீ சாய் ஆகியோர் தொகுத்து வழங்கினர். பங்கேற்பாளர்கள் தாங்கள் புதிதாக பெற்ற பயிற்சி மற்றும் திறன்களை கடைகளை அமைப்பதற்கும், தயாரிப்புகளை பிராண்ட் மற்றும் சந்தைப்படுத்துவதற்கும் நீதிபதிகள் குழுவில் பயன்படுத்தினர். குழு கட்டமைப்பு, வணிக புத்திசாலித்தனம் மற்றும் புதுமை ஆகியவற்றை வெளிப்படுத்தும் ஒரு பயிற்சியாக இது இருந்தது. சிறந்த மூன்று அணிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

தற்போதுள்ள திட்டங்களை குறிப்பிட்ட துறை அடிப்படையில் விரிவுபடுத்தவும், தமிழ்நாட்டில் மேலும் பல சமுதாயங்களுக்கு சேவை செய்யும் வகையில் அவற்றை விரிவுபடுத்தவும் கூடுதல் தனியார் மற்றும் பொது கூட்டாண்மையை மேம்படுத்துவது எதிர் காலத் திட்டங்களில் அடங்கும்.

# இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் “உங்களில் ஒருவன்” மடல்

சென்னை, 26 பிப்ரவரி 2025: நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் தொடர் மடல்.

ஆம்.. இது ஒரு தொடர்ச்சியான போராட்டம். பண்பாட்டுப் படையெடுப்பை முறியடிக்கும் அறவழிப் போராட்டம். அன்னைத் தமிழை ஆதிக்க மொழியிடமிருந்து பாதுகாக்கின்ற போராட்டம். இனத்தின் அடையாளத்தைத் தக்க வைத்து, தாய்மொழியைக் காலத்திற்கேற்ற அறிவியல் தொழில் நுட்பத் தன்மையுடன் 'ளர்த்தெடுக்கும் போராட்டம். 85 ஆண்டுகளுக்கும் மேலாக சளைக்காமல் தொடரும் வெற்றிகரமான போராட்டம். அதுதான் தமிழர்களின் உணர்வுடன் கலந்துள்ள இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம்!

இந்தியை அவர்கள் திணித்துக் கொண்டே இருக்கிறார்கள். நாம் எதிர்த்துக் கொண்டே இருக்கிறோம். ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வரை ஆதிக்கத்துக்கு எதிரான போராட்டம் தொடரும் என்று நான் உறுதி அளிக்கிறேன்.

உயிரைக் கொடுத்து தமிழைக் காத்த கொள்கைப் பட்டாளத்தைக் கொண்ட இயக்கத்தின் வழிவந்தவர்கள் நாம். அப்போதும் இப்போதும் நம்மை எதிர்க்கும் ஒரு சிறு ‘விபீடணக்’ கூட்டத்தை இந்த மண்ணில் எதிர்கொண்டுதான் வருகிறோம். வடக்கின் ஆதிக்கத்திற்கு வால் பிடிக்கும் அந்த விஷமக் கூட்டம் நம்மை நோக்கி கேட்கின்ற முதல் கேள்வி, 'இந்தியா முழுவதும் உள்ள மாநிலங்கள் எல்லாம் இந்தியை ஏற்றுக் கொண்டிருக்கும்போது, தமிழ்நாடு மட்டும் ஏற்க மறுப்பது ஏன்?' என்பதுதான்.

இந்தியா விடுதலை அடைந்து, தனக்கான அரசியமைப்புச் சட்டத்தை வகுத்துக் கொண்டு, குடியரசு நாடாக ஆன போது, கல்வி என்பது மாநிலப் பட்டியலில் இடம் பெற்றிருந்தது. ஒவ்வொரு மாநிலமும் தனக்கான மொழிக் கொள்கையை வகுத்துக் கொள்ளும் வாய்ப்பு அமைந்தது. இந்தியா விடுதலையடைவதற்கு முன்பே, தனக்கான மொழிக் கொள்கையையும் தொலைநோக்குப் பார்வையுமம் கொண்டிருந்தது இன்றைய தமிழ்நாடான அன்றைய சென்னை மாகாணம். அதற்கு அடிப்படைக் காரணம், திராவிட இயக்கத்தின் மொழியுணர்வும் இனப் பற்றும்தான். அதுதான், தமிழ்நாடு இன்றளவும் தனித்துவமான மாநிலமாகவும், கல்வியில்-, திறன் மேம்பாட்டில்- உலகளாவிய உயர்ந்த வேலை வாய்ப்புகளில் முன்னணியில் நிற்கும் மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்தியிருக்கிறது.

தாய்நிலத்தில் ஆழக் காலூன்றி, உலகப் பரப்பை ஆங்கிலத்தின் மூலமாகக் கைப்பற்றினோம்.

தாய்மொழியை அடிப்படையாகவும், ஆங்கிலத்தைத் தொடர்பு மொழியாகவும் கொண்டு பேரறிஞர் பெருந்தகை அண்ணா வகுத்தளித்த இருமொழிக் கொள்கையைத் தமிழ்நாடு கடைப்பிடித்து வருவதால்தான் இந்த வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

தாய்மொழியாம் தமிழ் மொழி, இந்திய அரசினால் செம்மொழித் தகுதியைப் பெற்ற முதல் மொழி என்ற பெருமையைப் பெற்றுத் தந்தார் முத்தமிழறிஞர் கலைஞர். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் நிலப் பரப்பின் பண்பாட்டு வரலாற்றை எடுத்துக் காட்டும் அகழாய்வுகளில் கிடைக்கும் பானை ஓடுகளில் தொடங்கி, இன்றைய அறிவியல் தொழில் நுட்பத்தின் வியக்கத்தக்க வளர்ச்சியான செயற்கை நுண்ணறிவு வரை தமிழ் மொழி தன் சீரிளமைத் திறம் குறையாமல் செழித்து வளர்ந்திருப்பதற்குக் காரணம், ஆதிக்க மொழியை என்றென்றும் எதிர்த்து நிற்கும் தமிழர்களின் போராட்டக் குணம் தான்.

தமிழ் மொழியை ஆதிக்க மொழிகளிடம் அடிமைப்படுத்திவிடாமல் காத்து-வளர்த்து, தமிழர்களின் திறனை மேம்படுத்தியதன் விளைவாகத்தான் தமிழ்நாடு இன்று பல இலக்குகளிலும் உயர்ந்து நிற்பதை இந்திய ஒன்றிய அரசின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இந்திய நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பொருளாதார ஆய்வறிக்கை பெருமையுடன் குறிப்பிடுகிறது.

நாம் எந்த மொழிக்கும் எதிரியில்லை. யார் எந்த மொழியைக் கற்பதற்கும் தடையாக நிற்பதில்லை. அதே நேரத்தில், தாய்மொழியாம் தமிழை அழிக்க நினைக்கும் ஆதிக்க மொழி எதுவாக இருந்தாலும் அதை அனுமதிப்பதில்லை என்பதால் தான் இருமொழிக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறோம். மொழிக் கொள்கையில் தமிழ்நாடு வகுத்துள்ள பாதையும், அதன் உறுதியான நிலைப்பாடுமே சரி என்பதை நமது அண்டை மாநிலங்கள் தொடங்கி, இந்தியாவின் பல மாநிலங்களும் உணர்ந்து வருவதுடன், அதை உரக்க வெளிப்படுத்தும் காலமாகவும் இது அமைந்துள்ளது.

உலகத் தாய்மொழி நாளான பிப்ரவரி 21 ஆம் நாள் இந்தியாவின் பல மாநிலங்களைச் சேர்ந்த தலைவர்களும், மொழி அறிஞர்களும், சமூகச் செயற்பாட்டாளர்களும் அவரவர் தாய்மொழியைக் காத்திட வேண்டும் என்பதனை வலியுறுத்தியதுடன், அதற்கு தமிழ்நாடு வழிகாட்டியாக இருக்கிறது என்பதையும் சுட்டிக் காட்டி யிருந்தனர்.

பிற மாநிலங்கள் பெற்றுவரும் இந்த விழிப்புணர்வுக்குத் தமிழ்நாடு தான் அடிப்படைக் காரணமாக இருக்கிறது என்பதால் தான், ஆதிக்க உணர்வு கொண்ட ஒன்றிய ‘பா.ஜ.க. அரசு, ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின்’ கீழ் தமிழ்நாட்டுக்குரிய நிதியைத் தர மறுக்கிறது. ஒன்றிய கல்வி அமைச்சர் ஆணவத்துடன் வன்மம் மிகுந்த வார்த்தைகளை வெளிப்படுத்துகிறார்.

தமிழ்நாட்டை வஞ்சிப்பதையே பா.ஜ.க. தன் கொள்கையாகக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள பா.ஜ.க. நிர்வாகிகளோ தமிழுக்குத் துரோகம் செய்யும் இந்தி-சமஸ்கிருதச் சேவகர்களாக இருக்கிறார்கள்.

# அசோக் நகர் அனைத்து மகளிர் காவல் நிலைய, சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்த வழக்கின் குற்றவாளிக்கு 20 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையுடன் ரூ.5,000/- அபராதம் விதித்து போக்சோ சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு.

சென்னை 26, பிப்ரவரி 2025: 08.02.2019 அன்று சென்னை பெருநகர காவல், தி.நகர் காவல் மாவட்டத்தில் வசித்து வந்த 13 வயது சிறுமியை 2 நபர்கள் பாலியல் பலாத்காரம் செய்ததாக, மேற்படி சிறுமியின் தாயார் கொடுத்த புகார் மீது டபிள்யு-26 அசோக் நகர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் (டபிள்யு-26 ஏடபிள்யுபிஎஸ்) போக்சோ சட்டப்பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து, சிறுமிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த 19 வயது (2019ம் ஆண்டு) நபரை கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைத்தனர்.

மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய 16 வயது இளஞ்சிறாரிடம் விசாரணை செய்து, சிறார் நீதிக்குழுமத்தில் ஆஜர் செய்யப்பட்டு, அரசு கூர்நோக்கு இல்லத்தில் சேர்க்கப்பட்டார்.

இவ்வழக்கு, காவல் துறையினரால் முறையாக விசாரிக்கப்பட்டு, இறுதி அறிக்கை தயார் செய்து, நீதிமன்றத்தில் தொடர்ச்சியாக சாட்சிகள் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற வழக்கு விசாரணை முடிவடைந்து, சென்னை, உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் 24.02.2025 அன்று இறுதி தீர்ப்பு வழங்கப்பட்டது.

இவ்வழக்கில் கைது செய்யப்பட்ட மேற்படி 19 வயது எதிரி மீது குற்றம் நிரூபிக்கப் பட்டதால், எதிரிக்கு 20 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.5,000/- அபராதமும், அபராதம் செலுத்த தவறினால் மேலும் 1 மாதம் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என கனம் போக்சோ சிறப்பு நீதிமன்ற நீதிபதி அவர்கள் தீர்ப்பு வழங்கினார். இளஞ்சிறார் இவ்வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

மேற்படி வழக்கில் சிறப்பாக புலனாய்வு செய்து, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி குற்றவாளிக்கு உரிய தண்டனை பெற்று தந்த கீ-26 அசோக் நகர் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர், மற்றும் நீதிமன்ற அலுவல் பணிபுரியும் காவல் குழுவினரை உயரதிகாரிகள் வெகுவாகப் பாராட்டினர்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# அரும்பாக்கம் காவல் நிலைய வழிப்பறி வழக்கில் சுமார் 8 ஆண்டுகள் தலைமறைவாக இருந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட குற்றவாளி கைது.

சென்னை, 26 பிப்ரவரி 2025: சென்னை, வடபழனி, 100 அடி ரோட்டில் வசித்து வரும் கனகராஜ், வ/27, த/பெ. கொம்பையா என்பவர் கடந்த 22.08.2014 அன்று அரும்பாக்கம், ஜானகிராமன் காலனி, பூந்தமல்லி நெடுஞ் சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தபோது, அங்கு வந்த 2 நபர்கள் மேற்படி கனகராஜை தாக்கி, அவர் வைத்திருந்த செல்போனை பறித்துச் சென்றனர். இது குறித்து கனகராஜ் கொடுத்த புகாரின்பேரில் கே-8 அரும்பாக்கம் குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து, எதிரிகள் 1.அருள்தாஸ் மற்றும் 2.சங்கர் ஆகிய இருவரும் 2014 வருடம் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இவ்வழக்கு தொடர்பாக, உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள 7வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று வந்த நிலையில், நீதிமன்ற பிணையில் சிறையிலிருந்து இருவரும் வெளியே வந்த நிலையில் எதிரி அருள்தாஸ் என்பவர் கடந்த 07.01.2021 அன்று இறந்துவிட்டார். மற்றொரு எதிரி சங்கர் 20.07.2017 அன்று முதல் மேற்படி வழக்கு விசாரணைக்கு முறையாக நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவாக இருந்து வந்த காரணத்தினால் கனம் நீதிமன்றம் எதிரி சங்கர் மீது கடந்த 25.10.2019 அன்று நீதிமன்ற பிடியாணை பிறப்பித்தது.

கே-8 அரும்பாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான தனிப்படை போலீசார், தீவிர தேடுதலில் ஈடுபட்டு, மேற்படி நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட தலைமறைவு எதிரி சங்கர், வ/40, த/பெ.மூர்த்தி, பொத்தை பாரதி நகர் தெரு, வீரவநல்லூர் கிராமம், அம்பை வட்டம், திருநெல்வேலி மாவட்டம் என்பவரை 24.02.2025 அன்று கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட எதிரி சங்கர் விசாரணைக்குப் பின்னர் 24.02.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற பிடியாணை நிறைவேற்றப்பட்டது.

# வியாசர்பாடி பகுதியில் நண்பரை கல் மற்றும் கத்தியால் தாக்கி கொலை முயற்சியில் ஈடுபட்ட 3 நபர்கள் கைது.







சென்னை, 26 பிப்ரவரி 2025: சென்னை, வியாசர்பாடி, காந்திபுரம் பகுதியில் வசித்து வரும் கோபிநாத், வ/29, த/பெ.உதயகுமார் என்பவர் பெயிண்டிங் வேலை செய்து வருகிறார். கோபிநாத், அவரது நண்பர்கள் விநாயகம், விஜய், முனியா, ஜங்கிலி ஆகாஷ் ஆகியோருடன் அவ்வப்போது மது அருந்தி வரும் நிலையில், சில நாட்களுக்கு முன்பு ஞோபிநாத்துக்கும் விநாயகத்துக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு இருவரும் பேசாமல் இருந்து வந்தனர்.

இந்நிலையில், 23.02.2025 அன்று இரவு விநாயகம், விஜய், முனியா, ஜங்கிலி ஆகாஷ் ஆகியோர் கோபிநாத்தை மது அருந்த திடீர் நகர், இரயில்வே டிராக் அருகே அழைத்துச் சென்று பேசிக் கொண்டிருந்தபோது, மீண்டும் இருவரும் பேசாமல் இருந்ததால், கோபிநாத் கோபித்துக் கொண்டு வீட்டிற்கு சென்றுவிட்டார். சிறிது நேரம் கழித்து, விஜய் மற்றும் முனியா ஆகியோர் கோபிநாத் வீட்டிற்கு சென்றபோது, அங்கு வெளியில் நின்றிருந்த கோபிநாத்தை இருவரும் தகாத வார்த்தைகளால் பேசி, கல்லால் தாக்கினர்.

மேலும், விஜய் தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் கோபிநாத்தை தாக்கி இரத்தக்காயம் ஏற்படுத்திவிட்டு, இருவரும் கொலை மிரட்டல் விடுத்து தப்பிச் சென்றனர். இரத்தக்காயமடைந்த கோபிநாத் ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சை பெற்று வரும் நிலையில், மேற்படி சம்பவம் குறித்து கொடுத்த புகார் மீது பி-3 வியாசர்பாடி காவல் நிலையத்தில் கொலை முயற்சி உள்ளிட்ட சட்டப் பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

பி-3 வியாசர்பாடி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி கொலை முயற்சி வழக்கில் சம்பந்தப்பட்ட வியாசர்பாடி காந்தி புரத்தைச் சேர்ந்த 1.விஜய், வ/25, த/பெ.ராஜேந்திரன், 2.முரளி (எ) முனியா, வ/22, த/பெ.சுரேஷ், 3.விநாயகம், வ/25, த/பெ.ராஜன் ஆகிய 3 நபர்களை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி விநாயகம் பி-3 வியாசர்பாடி காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது வழிப்பறி, கஞ்சா, ஆயுதம் வைத்திருந்தது உட்பட 7 குற்ற வழக்குகளும், மற்றொரு எதிரி முரளி (எ) முனியா மீது 1 குற்ற வழக்கும் உள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரிகள் மூவரும் விசாரணைக்குப் பின்னர், 24.02.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

# 77வது பிறந்தநாளை முன்னிட்டு திருப்போரூரில் தையூர் குமரவேல் தலைமையில் ஜெயலலிதா உருவப் படத்திற்கு மாலை

சென்னை, 26 பிப்ரவரி 2025: செங்கல்பட்டு கிழக்கு மாவட்டம் திருப்போரூர் வடக்கு ஒன்றிய கழகம் மற்றும் திருப்போரூர் நகர கழகம் சார்பில் திருப்போரூர் பேரூராட்சியில் அமைந்துள்ள பேருந்து நிறுத்தம் எதிரே எம்ஜிஆரின் முழு உருவ சிலையின் கீழ் அம்மாவின் 77வது பிறந்தநாள் நிகழ்ச்சி திருப்போரூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளரும், தையூர் முதல் நிலை ஊராட்சி மன்ற தலைவருமான தையூர் எஸ்.குமரவேல் தலைமையில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

திருப்போரூர் நகரக் கழக செயலாளர் ஜி.முத்து முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட கழக செயலாளர் திருக்கழுக் குன்றம் எஸ்.ஆறுமுகம் கலந்து கொண்டு முதலாவதாக எம்ஜிஆரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வணங்கினார். இதனை தொடர்ந்து அலங்கரித்து வைக்கப் பட்டிருந்த அம்மாவின் உருவ படத்திற்கு மாலை அணிவித்து தீபம் காட்டி மலர்தூவி மரியாதை செலுத்தி வணங்கினார். பின்பு இனிப்புடன் சுமார் 200-க்கும் மேற்பட்ட பொது மக்களுக்கு அன்ன தானம் வழங்கினார். இவரைத் தொடர்ந்து கட்சியினர்கள் அம்மாவின் ளுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி வணங்கினார்கள்.

இந்நிகழ்வில்கட்சியின் செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட கழக அம்மா பேரவை செயலாளர் ஆனூர்வீ. பக்தவச்சலம், எம்ஜிஆர் மன்ற அவைத் தலைவர் கணேசன், தலைமைக் கழகப் பேச்சாளர் நாவலூர் முத்து, செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட இளைஞரணி செயலாளர் பையனூர் ஆர்கே குமார், செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட கழக வழக்கறிஞர் பிரிவு தலைவர் சிவராமன்,

அண்ணா தி.மு.க. நிர்வாகிகள் ராஜேந்திரன், கவிதா குமரேசன், பி. வாசுதேவன், மஞ்சுளா, மேரி, லட்சுமி, தாட்சாயணி, பாஸ்கரன், கங்கா ஜெகதராமன், ராஜதுரை, குசலன், முட்டுக்காடு முனுசாமி, காரணை பாஸ்கரன், தனசிங், முருகவேல், விஜய் ஐயர் மற்றும் திருப்போரூர் வடக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் பொறுப்பாளர்கள், என 300க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள்.

கலந்து கொண்ட அனைவருக்கும் திருப்போரூர் வடக்கு ஒன்றியம் மற்றும் நகர கழகம் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடு களையும் திருப்போரூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளரும் தையூர் ஊராட்சி மன்ற தலைவருமான தையூர் எஸ்.குமரவேல் கட்சியினர்களை ஒருங்கிணைத்து செய்திருந்தார்.

# தி.மு.க. வழக்கறிஞர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்

சென்னை, 26 பிப்ரவரி 2025: தி.மு.க. வழக்கறிஞர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 24.02.2025 அன்று மாலை 5.00 மணியளவில் சென்னை, தேனாம்பேட்டை, அண்ணா அறிவாலயம், கழக அலுவலகத்தில் சட்டத்துறைச் செயலாளர், மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ, எம்.பி. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இணைச் செயலாளர்கள் கே.எஸ். இரவிச் சந்திரன், கே.எம். தண்டபாணி, சு. இராதாகிருஷ்ணன், பி.ஆர். அருள்மொழி, இரா. தாமரைச் செல்வன், ஜெ. பச்சையப்பன், சூர்யா வெற்றிக்கொண்டான், துணைச் செயலாளர்கள் பெ.ரகு, ஜி.சந்திர போஸ், என். மருதுகணேஷ், எஸ். ராஜா முகமது தலைமைக் கழக வழக்கறிஞர்கள் கே.ஜெ. சரவணன், வீ. கவிகணேசன், கே. மறைமலை, சுவை. கே. சுரேஷ், மு. தினேஷ்குமார், மீஞ்சூர் கே. சுரேஷ், ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானம் - 1 -கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் 72ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவை எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

முத்தமிழறிஞர் கலைஞர் - தயாளு அம்மையாரின் மூன்றாவது மகவாகத் தோன்றி, தாயிற் சிறந்த கோயிலுமில்லை - தந்தை சொல்மிக்க மந்திரமில்லை எனும் கூற்றுக்கு ஏற்ப இளம் பருவத்திலேயே ஏழை எளியோருக்கு உதவிடும் நோக்கில், தம்மை ஈடுபடுத்திக் கொண்டு, படிப்படியாக கல்வியிலும், பொது வாழ்விலும் தம்மை உயர்த்திக் கொண்டு, இன்று உலகமே வியந்து போற்றுகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராகவும், பவள விழா கண்ட தி.மு.கழகத்தின் தலைவராகவும் திகழ்ந்து, சநாதன சக்திகளுக்கு சம்மட்டி அடி கொடுத்து, திராவிடத்தையும், தமிழையும், தமிழர் களையும் பாதுகாவல் அரணாகத் திகழ்ந்து வரும் மாண்புமிகு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 72ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா மனிதநேய விழாவாக தமிழ் கூறும் நல்லுலகம் 01.03.2025 அன்று கொண்டாவிருக்கிறது. அதுபோது கழக சட்டத்துறையின் மாநில - மாவட்ட - ஒன்றிய - பகுதி நிர்வாகிகள் சார்பில் மாபெரும் எழுச்சியுடன் கொண்டாடுவது என்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

தீர்மானம் 2 - வரலாற்று சிறப்புமிக்க தி.மு.க. சட்டத்துறை 3வது மாநில மாநாட்டில் பங்கேற்று எழுச்சியுரை ஆற்றிய கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி. கடந்த ஜனவரி 18ஆம் தேதி சென்னையில் நடைபெற்ற திமுக சட்டத்துறையின் மூன்றாவது மாநில மாநாட்டில் பங்கேற்று எழுச்சி உரையாற்றிய கழக தலைவர் அவர்களுக்கும், மாநாட்டிற்கு வாழ்த்து செய்தி அனுப்பி சிறப்பு செய்த மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், மற்றும் மாநாட்டில் கலந்து கொண்டு பல்வேறு தலைப்புகளில் உரையாற்றிய சிறப்பித்த சிறப்பு விருந்தினர்கள் அனைவருக்கும், பங்கேற்று சிறப்பித்த அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழக செயலாளர்கள், தலைமை கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மூத்த வழக்கறிஞர்கள் ஆகியோருக்கும், மேலும் இம் மாநாடு வரலாற்று சிறப்புமிக்க வெற்றியை பெற்றமைக்கு உறுதுணையாக இருந்த வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர்கள், மற்றும் நிர்வாகிகள், கழக வழக்கறிஞர்கள் ஆகிய அனைவருக்கும் இக்கூட்டம் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் - 3 பேரறிஞர் அண்ணா வழங்கிய இருமொழிக் கொள்கையே தமிழ் நாட்டில் என்றென்றும் நீடிக்கும் - மும்மொழிக்கு இடமே யில்லை! 2014ஆம் ஆண்டு பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி அமைந்த பின்னர், தமிழ்நாட்டில் இந்தித் திணிப்பை தொடர்ந்து செய்து வருகிறது. அவ்வப்போது, தி.மு.கழகம் மேற்கொண்ட பல்வேறு வகையானப் போராட்டங்களால், இந்தித் திணிப்பை ஒத்தி வைப்பது, சால்ஜாப்பு கூறுவது என்று ஒன்றிய அரசு கேலியும் கிண்டலும் செய்து வருகிறது.

1965ஆம் ஆண்டு மொழிப் போரைக் கண்ட தி.மு.கழகம், 1967ஆம் ஆண்டு தமிழகத்தில் ஆட்சியைக் கைப்பற்றியவுடன், இனி இருமொழிக் கொள்கை தான் என்று முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் வெட்டு ஒன்று - துண்டு இரண்டென அறிவித்த காலத்திலிருந்து, தமிழர்கள் இருமொழிக் கொள்கையில் உறுதியாக உள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், இன்றைய கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில், எக்காரணத்தைக் கொண்டும், இந்திக்கு இங்கே இடமில்லை என்று தெள்ளத் தெளிவுற அறிவித்த பின்னரும், புதிய தேசிய கல்விக் கொள்கை, யுஜிசி வரைவுக் கொள்கை, தமிழ் நாட்டிற்கு நிதியைத் தராமல் கல்வியைச் சிதைக்கும் பஞ்சமாபாதகம், அன்னைத் தமிழ் மொழியை இரண்டாந் தரமாக்கிடும் ஈனச் செயல் போன்றவற்றை திரும்பத் திரும்ப வலியுறுத்தி, பத்திரிகை, ஊடகங்கள் மூலம் மிரட்டல் விடுத்துவரும் ஒன்றிய மனிதவள மேம்பாட்டுத் துறையின் அமைச்சர் தர்மேந்திரப் பிரதான் மற்றும் ஒன்றிய அமைச்சர்கள், பா.ஜ.க. தலைவர்கள் அனைவரதும் மும்மொழிக் கொள்கைப் பொய் பிரச்சாரங்கள் அனைத்தும் முனை மழுங்கச் செய்திடும் வகையில், கழக சட்டத்துறை தமது பதிலடியை விரைந்தும் - விவேகத்துடனும் செயல்படுத்திட, நாடு முழுவதும் இந்தி திணிப்பு எதிர்ப்புக் கருத்தரங்குகள், தெரு முனைப் பிரச்சாரங்களை மேற்கொள்வது என்றும், சட்டத் துறையின் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

தீர்மானம் - 4 ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை ஒட்டு மொத்தமாக புறக்கணித்த ஒன்றிய அரசுக்கு கண்டனம் சமீபத்திய ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு எந்த நிதியும் ஒதுக்காமலும், குறிப்பாக தமிழ்நாடு என்ற பெயரே இடம் பெறாமல், கடந்த நாடாளு மன்றத் தேர்தலில் பாசிச பாஜக மற்றும் அதற்கு உறுதுணையாக இருந்த அனைத்துக் கட்சிகளுக்கும் தமிழ்நாட்டு மக்கள் படுதோல்வியை பரிசாக அளித்த ஒரே காரணத்திற்காக சமீபத்திய ஒன்றிய. அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு எந்த நிதியும் ஒதுக்காமலும், குறிப்பாக தமிழ்நாடு என்ற பெயரே இடம்பெறாமல், தமிழ்நாட்டு மக்களை ஒட்டுமொத்தமாக புறக்கணித்த ஒன்றிய அரசுக்கு இக்கூட்டம் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் - 5 வழக்கறிஞர்கள் (திருத்த) சட்ட வரைவை முற்றிலுமாகத் திரும்பப் பெற பாசிச பாஜக அரசை வலியுறுத்துகிறோம்! ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வந்துள்ள வழக்கறிஞர் (திருத்த) சட்ட முன் வரைவு 2025 என்பது, பார் கவுன்சில்களின் கட்டுப்பாட்டைத் தன் கையில் எடுத்துக் கொண்டு, சட்டத் தொழிலின் சுதந்திரத்தைப் பறித்து, நீதித்துறையின் சுயூந்திரத்தை சங்பரிவார்களின் இந்துத்வா வழிமுறையில் நாட்டின் வழக்குரைஞர்களின் குரல்வளையை நெறிப்பதாகும்.

வழக்குரைஞர், சட்டம், நீதி, நீதிமன்றங்களையும், அரசியலமைப்புச் சட்டத்தையும் சிதைத்திடும் நோக்கில், ஒவ்வொரு நாளும் கோணங்கித் தனமான முன் வரைவுகளை கொண்டு வரும், பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசு, சட்டத் தொழிலின் தன்னாட்சியை மதிக்கும் வரையில், சட்ட வரைவு - 2024ஐ முற்றிலுமாகத் திரும்பப் பெறுமாறு கழக சட்டத்துறையின் இக்கூட்டம் ஒன்றிய பா.ஜ.க. அரசை வலியுறுத்துகிறது.

இந்த சட்ட முன்வடிவை ஒன்றிய பா.ஜ.க. அரசு உடனடியாக திரும்ப பெற வேண்டும் என்ற கருத்தை தனது அறிக்கையின் மூலம் வலியுறுத்திய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த கூட்டம் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் - 6 தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு நியாயமாக தரவேண்டிய நிதியினை உடனே வழங்க வேண்டும். தமிழ் நாட்டிற்கு ஒன்றிய அரசு நியாயமாக தர வேண்டிய ஜிஎஸ்டி பங்கு தொகை, பேரிடர் கால நிவாரண நிதி, கல்வி நிதி உள்ளிட்ட நிதியினை உடனே வழங்க வேண்டுமென இக்கூட்டம் ஒன்றிய அரசை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் - 7 தமிழ்மொழி வளர்ச்சிக்கு குறைந்த அளவே நிதி ஒதுக்கி தமிழ்மொழியை புறக்கணிக்கும் ஒன்றிய அரசுக்கு கண்டனம். தமிழ் மொழியின் மீது அக்கறை உள்ளது போல் நடிக்கும் ஒன்றிய பிரதமர் சில ஆயிரம் பேர் பேசும் சமஸ்கிருதத்திற்கு ரூ 1800/- கோடி நிதி ஒதுக்கியும், எட்டு கோடி பேர் பேசும் தமிழ் மொழிக்கு வெறும் ரூ 74/- கோடி நிதி ஒதுக்கி பாரபட்சமாக செயல்படும் ஒன்றிய பிரதமரின் இச்செயலை தமிழ்நாட்டு மக்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள், மன்னிக்கவும் மாட்டார்கள் என்றும், இதுபோல் தமிழ் நாட்டையும் தமிழ் மொழியையும் ஒட்டு மொத்தமாக புறக்கணிக்கும், மாற்றான் தாய் மனப்பான்மையோடு நடந்து கொள்ளும் ஒன்றிய பிரதமருக்கு இக்கூட்டம் கண்டனம் தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் - 8 - 1000 இடங்களில் “முதல்வர் மருந்தகங்கள்” திட்டம் வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி! கடந்தாண்டு சுதந்திர தின விழா உரையின் போது, “குறைந்த விலையில் மருத்து மாத்திரைகளையும், பிற மருந்துகளையும் பொது மக்களுக்கு கிடைக்கச் செய்யும் வகையில் முதற்கட்டமாக 1000 முதல்வர் மருந்தகங்கள் துவங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். சொன்னதைச் செய்யும் திராவிட மாடல் ஆட்சியில், தமிழ்நாடு முழுவதும் குறைந்த விலையில் 1000 இடங்களில் “முதல்வர் மருந்தகங்கள்” 24.02,2025 திங்களன்று திறந்து வைத்து ஏழை - எளிய மக்கள் பயனடையும் வகையில் சாதனை புரிந்துள்ள கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தி.மு.க. சட்டத்துறையின் ஆலோசனைக் கூட்டம் தமது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் - 9 - 2026 சட்டமன்றத் தேர்தல் பணிக்காக கழக வழக்கறிஞர்களுக்கு பயிற்சி பாசறை. 2026 சட்டமன்றத் தேர்தலையொட்டி கழக மாவட்டங்கள் தோறும் வழக்கறிஞர் களுக்கு தேர்தல் பணி குறித்த பயிற்சி வகுப்பு எடுத்து வழக்கறிஞர் களை தயார்படுத்தும் பணியை விரைவில் துவங்க இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தமிழ் குரல் மக்கள்
tamilmakkalkural@gmail.com
RNI No. - TNTAM24940
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

புதன்,
பிப்ரவரி 26, 2025

## ப்ளூ ஸ்டார் நிறுவனம், 150 மாடல்கள் கொண்ட அறை ஏசிகளின் ஒரு விரிவான வரம்பை அறிமுகப்படுத்துகிறது; ஸ்மார்ட் வைஃபை மற்றும் ஹெவி டியூட்டி ஏசி பிரிவுகளில் தனது நிலையை வலுப்படுத்த திட்டமிட்டுள்ளது

சென்னை 26, பிப்ரவரி 2025: ப்ளூ ஸ்டார் லிமிடெட், வருகின்ற கோடை காலத்திற்காக, ஒரு 'ஃப்ளாகூஷிப்' பிரீமியம்' வரம்பு உட்பட, 150 மாடல்கள் கொண்ட அறை ஏசிகளின் அதன் புதிய விரிவான வரம்பை இன்று ெ'ளியிட்டது. இந்த வரிசையில் இது அனைத்து விலைப் புள்ளிகள் முழுவதிலும் ஒவ்வொரு நுகர்வோர் பிரிவின் தேவைகளையும் பூர்த்தி செய்கின்ற இன்வெர்டர், ஃபிக்ஸ்ட் ஸ்பீட் மற்றும் விண்டோ ஏசிகள் உள்ளன.





நாட்டின் பல பகுதிகளில் ஏற்படும் கடும் கோடை வெப்பம் மற்றும் இந்தியாவின் விரிவடைந்து வரும் நடுத்தர வர்க்கத்தின் அதிகரித்து வரும் நிகர வருமானம் ஆகியவற்றால் உந்தப்பட்ட அறை ஏசிகளுக்கான இந்த தேவை கணிசமான வளர்ச்சியைக் காண்கின்றது. மேலும், அடுக்கு 3, 4 மற்றும் 5 சந்தைகளில் அதிகரித்து வருகின்ற தேவை, மாற்று வாங்குபவர்கள் மற்றும் தங்கள் வீடுகளில் கூடுதல் அறைகளுக்கு ஏசி வாங்கும் நுகர்வோர் ஆகியோரால் இந்த வளர்ச்சி மேலும் தூண்டப்படுகிறது. மதிப்பீடுகளின்படி, இந்தியாவின் ஏசி தொழில் நிதியாண்டு 30க்குள் இரட்டிப்பாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அதிகரித்து வரும் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, ப்ளூ ஸ்டார் நிறுவனம் தனது உற்பத்தி, ஆர்&டி மற்றும் புதுமைத் திறன்களைப் பயன்படுத்தி புதிய, வேறுபட்ட மற்றும் வகுப்பில் சிறந்த ஏசிகளை அறிமுகப் படுத்தியுள்ளது.

2025 ஆண்டுக்கான புதிய ஏர் கண்டிஷனர்களின் வரம்பு -இந்த நிறுவனம், தீவிர வானிலை நிலைமைகளிலும் அதிக குளிரூட்டும் செயல்திறனை வழங்குகின்ற 3-ஸ்டார் மற்றும் 5-ஸ்டார் வகைகளில் பல மாடல்களை உள்ளடக்கிய ஒரு விரிவான வரம்பை அறிமுகப் படுத்தியுள்ளது, இந்த மாடல்கள் ரூ. 28,990 முதல் தொடங்குகின்ற கவர்ச்சிகரமான விலைகளுடன் 0.8 திஆர் முதல் 4 திஆர் வரை பல்வேறு குளிரூட்டும் திறன்களில் கிடைக்கின்றன.

'கஸ்டமைஸ்டு ஸ்லீப்' போன்ற தனித்தன்மை வாய்ந்த மற்றும் ஸ்மார்ட் அம்சங்களைக் கொண்டுள்ள ஸ்மார்ட் வைஃபை ஏசிகளின் கிட்டத்தட்ட 40 மாடல்கள் இதில் அடங்கும். இதில் தடையற்ற தூக்கத்தை உறுதி செய்கின்ற வகையில் 12 மணி நேரத்திற்கு, ஒவ்வொரு மணி நேரத்திற்கும் வெப்பஅளவு, ஃபேன் வேகம், கூல்/ஃபேன் மோட் மற்றும் ஏசியை இயக்குதல் /நிறுத்துதல் போன்றவற்றை ஒருவர் கூட்டியே அமைக்கலாம். வாய்ஸ் கமாண்ட் டெக்னாலஜியுடன், வாடிக்கையாளர்கள் தங்கள் ஸ்மார்ட் சாதனங்கள் மூலம் தங்கள் ஏசிகளை இயக்க முடியும், உதாரணமாக அமேசான் அலெக்ஸா அல்லது கூகிள் ஹோம் போன்றவற்றை ஆங்கிலம் அல்லது ஹிந்தி மொழியில் குரல் கட்டளைகள் மூலம் பயன்படுத்தலாம். கூடுதலாக, கண்காணிக்க, கட்டுப்படுத்த மற்றும் ஏசி பயன்பாட்டை வரம்பிடுவதற்கான அணுகல்தன்மையை வழங்குகின்ற எனர்ஜி மேனேஜ்மெண்ட் அம்சம் ஏசியின் மின்சார நுகர்வை முழுமையாக கட்டுப்படுத்த உதவுகிறது, இதன் மூலம் அதிகப்படியான மின்சார நுகர்வை தடுக்கிறது.

இந்த புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஏசிகள் பல்வேறு சக்தி வாய்ந்த அம்சங்களுடன் பொருத்தப்பட்டுள்ளன. இவற்றில் பல்வேறு அளவுருக்களை உணர்ந்து, சரிசெய்து, கண்காணித்து அதிக பட்ச சௌகரியத்தை வழங்கும் ஒரு உயர்நுட்ப மற்றும் உள்ளுணர்வு அல்காரிதம் ஆன 'ஏஐ புரோ+' என்ற ஒரு புதுமையான அம்சம் அடங்கும். மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம் ஏசியின் உள் யூனிட்டை சுத்தமாக வைத்து உகந்த செயல்திறனை பராமரிக்க வடிவமைக் கப்பட்ட மூன்று-படி செயல்முறையான 'டிஃப்ராஸ்ட் க்ளீன் டெக்னாலஜி' ஆகும். இது காயில் உறை பனியுடன் தொடங்கி, உருகி மற்றும் உலர்த்துவதன் மூலம் செயல்திறனை கணிசமாக மேம்படுத்தி அதன் ஆயுட்காலத்தை நீட்டிக்கிறது. கூடுதலாக, அனைத்து ப்ளூ ஸ்டார் இன்வர்டர் ஏசிகளும் ஸ்மார்ட் ரெடியாக உள்ளன மேலும் ஒரு தனி ஸ்மார்ட் தொகுதியை சேர்ப்பதன் மூலம் ஸ்மார்ட் ஏசிகளாக தரமுயர்த்தலாம்.

இன்னும் கூடுதலாக, இவை விரைவான குளிரூட்டலுக்கான 'டர்போ கூல்', வாடிக்கையாளர், குளிரூட்டல் திறனை மேல்நோக்கி அல்லது கீழே சரிசெய்ய அனுமதிக்கும் 'கன்வெர்ட்டிபிள் 6-இன்-1 கூலிங்', மற்றும் ஐடியு மற்றும் ஓடியு இரண்டிற்கும், காயில் அரிப்பு மற்றும் கசிவைத் தடுப்பதற்கும் மற்றும் நீண்ட ஆயுளைப் பெறுவதற்கும் முறையே நானோ ப்ளூ புரொடெக்ட் டெக்னாலஜி மற்றும் ஹைட்ரோஃபிலிக் 'ப்ளூ ஃபின்' பூச்சு போன்ற அம்சங்களை உள்ளடக்குகின்றன. வேறு சில தனித்துவமான அம்சங்களில், ஒப்பிடமுடியாத துல்லியம் மற்றும் நம்பகத்தன்மையை வழங்குகிற டிஜிக்யு ஆக்டா சென்சார்கள்; ஒவ்வொரு 0.5குசி லும் வெப்பநிலையை அமைக்கும் சீரான குளிரூட்டல் மற்றும் துல்லியமான குளிரூட்டல் தொழில் நுட்பத்திற்கான 4-வழி ஸ்விங் மற்றும் பரந்த கோண லூவர் இயக்கம் ஆகியவை அடங்கும். கூடுதலாக இந்த வரம்பு, காற்று குளிர்ச்சியாக மட்டுமல்லாமல், தூய்மையானதாகவும் சுத்தமாகவும் இருக்கும் என்பதை உறுதிப் படுத்தும் ஒரு ஹெஃபா ஃபில்ட்டர், பிஎம்2.5 ஃபில்ட்டர் மற்றும் செயல்படுத்தப்பட்ட கார்பனுடன் கூடிய ஆன்டி-மைக்ரோபியல் போன்ற மேம்பட்ட வடிகட்டுதல் விருப்பங்களின் யூர்வு களை வழங்குகிறது. ப்ளூ ஸ்டார் நிறுவனத்தின் இன்வெர்ட்டர் ஏசிகளின் மற்றொரு முக்கிய அம்சம், வெளிப்புற வோல்டேஜ் ஸ்டெபிலைசரின் தேவையை நீக்குகின்ற அவற்றின் பரந்த இயக்க மின்னழுத்த வரம்பு ஆகும்.

## தமிழ் திரையுலகில் முதல்முறை.. வேற லெவல் அனுபவம் கொடுக்கும் மர்மர் டிரெய்லர்..“நான் நம்பாத விஷயத்தை அனைவரும் கண்டு அஞ்சும் அளவுக்கு படமாக எடுத்திருக்கிறேன்“ - மர்மர் இயக்குநர் ஹேம்நாத் நாராயணன்

சென்னை, 26 பிப்ரவரி 2025: தமிழ் திரையுலகில் முதல் ஃபவுண்ட் ஃபூட்டேஜ் ஹாரர் திரைப்படம் என்ற வகையில் மர்மர் சாதனை படைக்க இருக்கிறது. இந்தப் படத்தை ஹேம்நாத் நாராயணன் எழுதி, இயக்கியுள்ளார். எஸ்.பி.கே. பிக்சர்ஸ் சார்பில் பிரபாகரன் மற்றும் ஸ்டான்ட் அலோன் பிக்சர்ஸ் இன்டர்நேஷனல் தயாரித்துள்ளன. இந்தப் படத்தின் இரண்டு போஸ்டர்கள் வெளியாகி பெரும் பாராட்டை பெற்றது.

இந்த நிலையில் மர்மர் திரைப்படத்தின் டிரெய்லர் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. அதில், திரைப்படத்தின் இயக்குநர் ஹேம்நாத் நாராயணன், ஒளிப்பதிவாளர் ஜேசன் வில்லியம்ஸ், ஒலி வடிவமைப்பாளர் கெவின் ஃபிரடெரிக், படத்தொகுப்பாளர் ரோஹித் மற்றும் இதர தொழில்நுட்ப கலைஞர்கள் கலந்து கொண்டனர்.

இந்த விழாவில் படத்தொகுப்பாளர் ரோஹித் பேசும் போது, "இந்தப் படத்தில் வாய்ப்பு கொடுத்த இயக்குநர் ஹேம்நாத் நாராயணன்-க்கு இந்த மேடையில் வைத்து நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விழாவில் நாங்கள் மேடையேறுவதற்கு காரணம் தயாரிப்பாளர் பிரபாகரன் தான். அவருக்கும் நன்றி. இந்தப் படத்தில் பணியாற்றியதில் மிக்க மகிழ்ச்சி மற்றும் பெருமையாக இருக்கிறது. இந்தப் படத்தை திரையரங்குகளில் பாருங்கள். நிச்சயம் இந்தப் படம் உங்களை திருப்திப்படுத்தும் என்று நம்புகிறோம். இயக்குநர் தனக்கு என்ன தேவை என்பதில் மிகவும் கவனமாகவும், தெளிவாகவும் இருந்துள்ளார். இதற்காக கடின உழைப்பை வழங்கியிருக்கிறார். இந்தப் படம் எங்களுக்கு நல்ல எதிர்காலத்தை கொடுக்கும் என்றும் உங்களுக்கு சிறப்பான அனுபவத்தை கொடுக்கும் என்றும் நம்புகிறோம்," என்று கூறினார்.

படத்தின் ஒலி வடிவமைப்பாளர் கெவின் பேசும் போது, "இந்தப் படத்தின் இயக்குநரை முதலில் சந்தித்த போது, படத்தில் இசை இல்லை என்று கூறிவிட்டார். அது பெரிய சவாலாக இருந்தது. எல்லா படங்களும் இசையை சார்ந்து உருவாக்கப்படுகிறது. ஆனால், ஹாரர் திரைப்படத்தில் இசை இல்லாமல் எப்படி பணியாற்ற போகிறோம் என்று ஆலோசனை செய்தோம். அந்த வகையில், இந்தப் படம் வித்தியாசமாக உருவாகி இருக்கிறது. இவை அனைத்தும் வித்தியாசமான அனுபவத்தை கொடுக்கும் என்று நினைக்கிறேன். நன்றி," என்று கூறினார்.

கலை மற்றும் புரொடக்ஷன் இயக்குநர் ஹாசினி பேசும் போது, "இந்தப் படம் மிகவும் வித்தியாசமான ஒன்று என்பதை டிரெய்லரில் இருந்தே தெரிந்து கொண்டிருப்பீர்கள். ஹாரர், திரில்லர், பழிவாங்கல் என பலவிதமான கதைகளை நாம் திரையில் பார்த்திருப்போம். ஆனால் ஃபவுண்ட் ஃபூட்டேஜில் இப்படியொரு கதையை இதுவரை யாரும் பார்த்திருக்க முடியாது. இயக்குநரை பற்றி ஒருவிஷயம் மட்டும் சொல்ல வேண்டும். இந்தப் படம் ரிலீசுக்கு பிறகு இயக்குநரை சிறுவர் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் தெரியும். அவருக்கு நல்ல பெயரெடுத்துக் கொடுக்கும். அனைவருக்கும் நன்றி," என்றார்.

மர்மர் படத்தின் சிறப்பு ஒப்பனையாளர் செல்டன் பேசும் போது, " இந்தப் படத்தின் ஒளிப்பதிவாளர் சிறப்பாக பணியாற்றி இருக்கிறார். மிகவும் சவாலாக இருந்தது. இந்தப் படத்தில் வரும் உண்மை கதாபாத்திரத்தை மூன்று நாட்கள் தொடர்ச்சியாக உண்மையில் பார்த்தது நான் தான். இதனால் எனக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டது. பிறகு திருவண்ணாமலை கோவிலில் சிறப்பு வழிபாடு செய்து, அங்கு எனக்கு சுத்திப் போட்டார்கள். அதன்பிறகு வந்துதான் இந்தப் படத்தில் பணியாற்றினேன். ஆனால் நான் அதை அவர்களிடம் கூறவேயில்லை. படம் முடிந்த பிறகு இதை சொன்னதும் எல்லோரும் அலறினார்கள். இந்தப் படத்தில் பணியாற்ற எனக்கு வாய்ப்பு கொடுத்த படக்குழுவுக்கு நன்றி. என்னைப் போல் மேலும், பல இளைஞர்கள் இந்த துறையில் பணியாற்றி வருகின்றனர். அவர்களுக்கும் வாய்ப்பளித்து, ஆதரவு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அனைவருக்கும் நன்றி," என்று தெரிவித்தார்.

மர்மர் பட விநியோகஸ்தர் டிரீம் வாரியர் பிக்சர்ஸ் குகன் பேசியதாவது, "பத்திரிகை, ஊடகத்தினர் அனைவருக்கும் வணக்கம். இந்தப் படத்தை தயாரித்த எஸ்.பி.கே. பிக்சர்ஸ் பிரபாகரன், மற்றும் ஸ்டான்ட் அலோன் பிக்சர்ஸ் இன்டர்நேஷனல் மற்றும் இயக்குநர் ஹேமந்த் நாராயணன், படத்தொகுப்பாளர் ரோஹித், ஒளிப்பதிவாளர் ஜேசன், ஒலி வடிவமைப்பாளர் கெவின் மற்றும் கலை இயக்குநர் ஹாசினி ஆகியோருக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். ஒப்பனையாளர் செல்டன் தனது பணி குறித்து பேசினார். ஒட்டுமொத்த குழுவும் சிறப்பாக பணியாற்றி உள்ளனர். முதலில் இயக்குநர் இந்தப் படத்தின் கதையை சொன்ன பிறகு டிரெய்லரை காண்பித்தார். உங்களை போல் தான் நானும் டிரெய்லரை பார்த்தேன். அதன்பிறகு படத்தை போட்டு காண்பிப்பதாக கூறினார். தமிழில் ஒரு படம் முழுக்க ஃபவுண்ட் ஃபூட்டேஜ் மற்றும் மோஷன் சிக்னஸ் உள்ள முதல் படம் இதுதான். இந்த அற்புதமான குழுவினருக்கு வாழ்த்துக்கள். இது மிகவும் இளமையான குழு. சமீபத்தில் நாம் மோஷன் சிக்னஸ் வீடியோ பார்த்தோம். நடிகர் அஜித் குமார் ஓட்டிய காரின் கேபின் பகுதியில் கேமரா பொருத்தப்பட்டு இருக்கும். அது கார் எங்கெங்கு செல்கிறது என்பதை நமக்கு காட்டும். உண்மையில், அந்த கார் சென்ற வேகம் மணிக்கு 320 கிலோமீட்டர்கள் ஆகும். இத்தகைய கேமரா ரேசிங் பற்றிய அனுபவத்தை 100 சதவீதம் கொடுக்கும். மற்றொரு உதாரணம், 1260 அடி உயரம் கொண்ட கட்டிடத்தின் மேல் தளத்தில் கண்ணாடியில் நடக்கும் அனுபவத்தை கொடுக்கிறார்கள். துபாயில் உள்ள கட்டிடம் ஒன்றில் இதேபோல் 760 அடி உயரத்தில் கண்ணாடியில் நடக்க முடியும். அப்படி அங்கு நடக்கும் போது மோஷன் சிக்னஸ் ஏற்படும். அந்த மாதிரியான அனுபவங்கள் அனைத்தும் இந்தப் படத்தில் உள்ளது. இந்தப் படத்தின் மிகமுக்கிய ஜானர் அதுதான்."





"இந்தப் படத்தின் கதை ஜவ்வாது மலையில் நடக்கும் சம்பவத்தை தொடர்ந்து ஒரு குழு அங்கு செல்கிறது. அவர்களுக்கு என்ன ஆனது என்பதே இந்தப் படத்தின் கதை. மிகவும் சுவாரஸ்யமாக உள்ளது. இதன் ஒலி வடிவமைப்பு அருமையாக இருக்கிறது. நீங்கள் அனைத்து படங்களுக்கும் நல்ல வரவேற்பை கொடுக்கின்றீர்கள். அதேபோல் இந்த இளம் குழுவினருக்கும் நீங்கள் ஆதரவளிப்பீர்கள் என எதிர்பார்க்கிறேன். இந்தப் படத்தை டிரீம் வாரியர் பிக்சர்ஸ் சார்பில் விநியோகம் செய்வதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். மார்ச் 7-ம் தேதி இந்தப் படம் திரையரங்குகிளில் வெளியாகிறது. இத்தகைய குழுவுடன் இணைந்ததில் மகிழ்ச்சி. புதிய ஜானர், ஹாலிவுட் தரத்தில் திரைப்பட அனுபவத்தை கொடுக்க வேண்டும் என்பதை இந்த இளம் குழு எண்ணமாக கொண்டிருக்கிறது. படத்தின் போஸ்டர் முதற்கொண்டு வித்தியாசமாக இருக்க வேண்டும் என பணியாற்றி உள்ளனர். இது சுவாரஸ்ய அனுபவத்தை ஏற்படுத்தும் படமாக இருக்கும். உங்கள் ஆதரவு எங்களுக்கு தொடர்ச்சியாக கிடைக்க வேண்டும். வாய்ப்புக்கு நன்றி," என்றார்.

விழாவில் இயக்குநர் ஹேம்நாத் நாராயணன் பேசியதாவது, "பல இயக்குநர்களுடன் பணியாற்றி இருக்கிறேன். நிறைய பத்திரிகையாளர் சந்திப்புகளை கடந்து வந்திருக்கிறேன். அங்கிருந்து பார்த்து கைத்தட்டி இருக்கிறேன். அந்த வகையில், இங்கிருந்து பார்க்க மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. முதலில் அனைவருக்கும் வணக்கம். ஊடகம் இன்றி இங்கு எதுவும் இல்லை. அரசியல், நடிகர், இயக்குநர் என யாராக இருந்தாலும் அவர்களை அடையாளம் கண்டு முதலில் வெளிக்கொண்டு வரும். அந்த வகையில், முதலில் உங்கள் அனைவருக்கும் மிகப்பெரிய நன்றி. மர்மர் தமிழ் திரையுலகின் முதல் ஃபவுண்ட் ஃபூட்டேஜ் ஹாரர் திரைப்படம். இதை பற்றி கொஞ்சம் விளக்கிக் கூறுகிறேன். உதாரணத்திற்கு ஒரு குண்டுவெடிப்பு சம்பவம் அரங்கேறினால், அது பற்றிய விசாரணைக்கு முதலில் அங்கிருக்கும் சி.சி.டி.வி. வீடியோக்களை தான் முதலில் ஆய்வு செய்வார்கள். அந்த சிசிடிவி வீடியோவில் இருக்கும் காட்சிகள் அவர்கள் தரப்பு ஆவணமாக இருக்கும். அதை படமாக காண்பிக்கும் போது, அந்த ஆவணத்தை தான் நாங்கள் படமாக காண்பிக்கிறோம். அமானுஷ்ய விஷயங்கள் சார்ந்த தகவல்களை பதிவிடும் ஏழு யூடியூபர்கள் ஜவ்வாது மலையில் இருக்கும் ஏழு கன்னிசாமிகள் மற்றும் மங்கை எனும் சூனியக்கார ஆவி சுற்றித்திரிவதை நேரடியாக பதிவு செய்ய செல்கிறார்கள். அவர்களுக்கு என்ன ஆனது, அவர்கள் செல்லும் வழியில் காணால் போகின்றனர். அவர்களை கண்டுபிடிக்க செல்லும் காவல் துறையினர் உடைந்து கிடக்கும் கேமராக்களை பறிமுதல் செய்கின்றனர். அவ்வாறு கேமராக்களில் உள்ள காட்சிகளை ஆவணப்படமாக வெளியிடுகிறார்கள். அதைத் தான் இந்தப் படத்தின் கதையாக வைத்திருக்கிறோம். இங்கு வந்திருக்கும் அனைவருக்கும் நன்றி. குகன் சார், பிரபாகரன் சார் நன்றி. நோயாளியாக வந்தீர்கள், தற்போது தயாரிப்பாளராக மாறியிருக்கிறீர்கள்.”

## கோவை அண்ணா தி.மு.க. எம்.எல்.ஏ. வீட்டில் லஞ்ச ஒழிப்புப் போலீசார் சோதனை

சென்னை 26, பிப்ரவரி 2025: வருமானத்துக்கு அதிகமாக ரூ.2.75 கோடி சொத்து குவித்ததாக கோவை அண்ணா தி.மு.க. எம்.எல்.ஏ. அம்மன் அர்ச்சுனன் வீட்டில் லஞ்ச ஒழிப்பு போலீசார் இன்று காலை முதல் சோதனை நடத்தி வருகின்றனர்.

கோவை மாநகர மாவட்ட அண்ணா தி.மு.க. செயலாளராக இருப்பவர் அம்மன் கே.அர்ச்சுனன். கடந்த 2021 தேர்தலில் போட்டியிட்டு வென்ற இவர் கோவை வடக்கு தொகுதி அண்ணா தி.மு.க. எம்.எல்.ஏ.வாக உள்ளார். இதற்கு முன்பு 2016 21 காலகட்டத்தில் கோவை தெற்கு தொகுதி அண்ணா தி.மு.க. எம்.எல்.ஏ.வாக இருந்தார். அந்த காலக்கட்டத்தில் அவர் வருமானத்துக்கு அதிகமாக சொத்துக்களைக் குவித்ததாக லஞ்ச ஒழிப்புத் துறைக்கு புகார்கள் வந்தன. அதன் அடிப்படையில் 2016-ம் ஆண்டு மே மாதம் முதல் 2022ம் ஆண்டு மார்ச் மாதம் வரை தனது வருமானத்திற்கு அதிகமாக ரூ.2 கோடியே 75 லட்சத்து 78 ஆயிரத்து 962 ரூபாய் சொத்து சேர்த்துள்ளதாக கோவை லஞ்ச ஒழிப்பு போலீசார் அவர் மீது நேற்று வழக்கு பதிந்தனர். அவருடைய மனைவி விஜயலட்சுமி பெயரிலும் வழக்குப் பதிவு செய்யப்பட்டு உள்ளது.

இந்நிலையில் இன்று காலை 6 மணி அளவில் கூடுதல் எஸ்.பி. திவ்யா தலைமையிலான கோவை மாவட்ட லஞ்ச ஒழிப்பு போலீசார் எம்.எல்.ஏ. அம்மன் கே அர்ச்சுனன் வீட்டிற்கு வந்தனர். வெளியாட்கள் உள்ளே நுழையவும், வீட்டில் இருப்பவர்கள் வெளியே செல்லவும் தடை விதித்தனர்.

வீட்டிலிருந்து அம்மன் கே.அர்ச்சுனனிடம் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ளதாக உங்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது, அதன் அடிப்படையில் உங்களது வீட்டில் சோதனை நடத்த வந்துள்ளதாக போலீசார் தெரிவித்தனர். தொடர்ந்து போலீசார் சோதனை நடத்துவதற்கு அவரும் ஒத்துழைத்தார். அவரது வீட்டில் ஒவ்வொரு அறையாக சென்று அவர்கள் சோதனை நடத்தினர். வீட்டில் இருந்த ஆவணங்களை கைப்பற்றி அது தொடர்பாக அவரிடம் விளக்கம் கேட்டு விசாரித்தனர். இவரது வீட்டு முன் பகுதியில் உள்ள ஒரு அறையில் தனி அலுவலகமும் உள்ளது, அங்கும் போலீசார் சோதனை நடத்தினர்.

சோதனை குறித்து தகவல் அடைந்த அண்ணா தி.மு.க. கட்சி நிர்வாகிகள் தொடர்ந்து அவரது வீட்டுக்கு முன்பு குவிந்தனர். இதனால் அங்கு கூடுதல் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.